Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 24/2023**

**2023-**ம் ஆண்டு டிசம்பர் மாதம் **21-**ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. **8** -வது நபரின் வாக்குமூலம் (**1969** ஆம் ஆண்டு **54-**வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | பழக்கடை வியாபாரம் |
| பெயர் | - | செல்வராஜ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | நாச்சிமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | 63 |
| சாதி | - | - | | | |

**<u>21-12-2023</u>**

**( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் வால்பாறையில் வசித்து பழக்கடை வியாபாரம் செய்துவருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவுமே தெரியாது. ஒரு நாள் போலீசார் வந்து வால்பாறை டவுனில் உள்ள பழக்கடை அருகில் வந்து இதுமாதிரி வீட்டுப்பக்கத்தில் சண்டைப்போட்டார்கள். படம் வரைந்திருக்கிறோம் கையெழுத்து போடச்சொன்னார்கள் போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகும்.**

2. வேறு என்ன செய்தார்கள் என்று தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ. 5 ஆகும்.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கையெழுத்து போடச் சொன்னதால் போட்டேன் என்றால் சரிதான். வேறு எந்த பொருளையும் காட்டி என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான்.

2. அந்த கையெழுத்தை என்னுடைய பழக்கடையில் வைத்துதான் போட்டேன் என்றால் சரிதான். எனக்கு முன்னாடியோ, பின்னாடியோ யாராவது கையெழுத்து போட்டார்களா என்றால் எனக்கு தெரியாது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், வால்பாறை.